MAY 2024 **U/ID 30617/UCL1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. பாரதியாரின் செல்லப்பெயர் மற்றும் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

2. பாரதியார் கவிதைகள் என்ற நூலில் இடம்பெற்றுள்ள முப்பெரும் பாடல்கள் யாவை?

3. பிள்ளைத் தமிழின் பத்து பருவங்கள் எவையெவை?

4. தென்றலின் சிறப்பினைப் பாரதிதாசன் எத்தனைத் தலைப்புகளில் பகுத்துப்பாடுகிறார்?

5. மகாவம்சம் என்ற நூல் எந்த மன்னர் வரலாற்றைக் கூறுகின்றது?

6. மு.வரதராசனாருக்கு டி.லிட் பட்டத்தை எந்தப் பல்கலைக்கழகம் வழங்கியது?

7. இன்குலாப் என்ற சொல்லின் பொருள் என்ன?

8. இன்குலாப்பின் எந்தப் படைப்பிற்குச் சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது?

9. பிரதாப முதலியார் சரித்திரத்தைப் படைத்தவர் யார்?

10. பூமணியின் இயற்பெயர் என்ன?

11. சிறுகதையின் இலக்கணம் யாது?

12. புதுமைப்பித்தன் சிறுகதைகளுள் நான்கின் பெயரைக் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. கண்ணன் பாட்டில் பாரதி கூறும் தத்துவங்கள் எவையெவை? – விளக்குக.

14. கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை – ஏன்?

15. அழகின் சிரிப்பின் புறாக்களின் சிறப்பு யாது? விளக்குக.

16. பொங்கல் குறித்து ரா.பி. சேதுப்பிள்ளை கூறுவனவற்றை எழுதுக.

17. அதியமானிடமும் தொண்டைமானிடமும் ஔவை தூது சென்ற நிலையினை விளக்குக.

18. பிறகு நாவலில் இடம்பெறும் ஆவாடை பாத்திரத்தின் குணநலன்களை எடுத்துரைக்க.

19. பெயர்ப் பொருத்தத்தை ஆய்க: கயிற்றரவு.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. அழகின் சிரிப்பில் ஆறு, செந்தாமரை, ஞாயிறு முதலியவற்றின் அழகுணர்வைச் சமூகச் சிந்தனையோடு பொருத்தி உரைக்க.

21. புரவலர்கள் புலவர்களைப் போற்றிய நிலையினைத் தமிழ் நெஞ்சம் வழிநின்று எடுத்துரைக்க.

22. இருபதாம் நூற்றாண்டின் நாடக வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

23. பிறகு நாவலின் மையக் கருத்தைச் சுருக்கமாக விளக்குக.

24. பொன்னகரம் சிறுகதையின் வழியாகப் புதுமைப்பித்தன் கூறவருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

———————